(17)

205210

## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
## பாராளுமன்றம்

---

# 1987 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க,
# நகர சபைகள் (திருத்தச்) சட்டம்

---

*[1987, ஏப்பிறல் மாதம் 16 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

*அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது*

---

1987 ஏப்பிறல் மாதம் 16 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.

கொழும்பு அரசாங்க வெளியீட்டலுவலகத்திற் பெற்றுக்கொள்ளலாம்.

---

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது

விலை : சதம் 45 தபாற் செலவு : சதம் 75

# 1987 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, நகர சபைகள் (திருத்தச்) சட்டம்

(1987 ஆம் ஆண்டு ஏப்பிறல் மாதம் 16 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது)

ச. வ.—ஓ. 14/86 (vi)

## நகரசபைகள் கட்டளைச்சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :—

1. இச்சட்டம் 1987 ஆம் ஆண்டின் 18 ஆம் இலக்க, நகரசபைகள் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். சுருக்கப் பெயர்.

2. (இதனகத்துப் பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடு செய்யப்படும்) நகரசபைகள் கட்டளைச்சட்டத்தின் 36 ஆம் பிரிவானது, அப்பிரிவின் (ஏ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளை உட்புகுத்துவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது :— 255 ஆம் அத்தியாயத்தின் 36 ஆம் பிரிவைத் திருத்துதல்.

"(ஏஏ) (i) பட்டினத்தில் கட்டடங்கள், தளபாடம், விளையாட்டு மைதானங்கள், விடுதிகள், ஆசிரியர்களுக்கான வீடுகள், விளையாட்டுப் பொருட்கள், நூல்நிலைய வசதிகள் போன்ற கல்வி வசதிகளின் ஏற்பாட்டிற்கான நிகழ்ச்சித் திட்டமொன்றைத் தயாரித்துத் தோதான அதிகாரிக்குச் சமர்ப்பிப்பதற்கு ;

(ii) பட்டினத்திலுள்ள பாடசாலைகளை ஆரம்பித்தல், மூடுதல், ஒன்றுசேர்த்தல், அவற்றுக்குப் பெயரிடுதல், அவற்றைத் தரமுயர்த்தல் என்பன பற்றித் தோதான அதிகாரிக்கு விதந்துரைத்தற்கு ;

(ஏஏஏ) பட்டினம், எந்த நிருவாக மாவட்ட எல்லைகளினுள் அமைந்துள்ளதோ, அந்த நிருவாக மாவட்டத்திற்காகத் தாபிக்கப்பட்ட அபிவிருத்திச் சபையினால் அதற்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தை, கடமையை அல்லது பணியைப் பிரயோகிப்பதற்கும், புரிவதற்கும், நிறைவேற்றுவதற்கும், அத்துடன் அத்தகைய அபிவிருத்திச் சபையினால் செயற்படுத்தப்படுவதற்கென அதற்குக் கையளிக்கப்பட்ட ஏதேனும் செயல் திட்டத்தை அல்லது வேலையைச் செயற்படுத்துவதற்கும் ;".

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 157 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது :— முதன்மைச் சட்டவாக்கத்தின் 157 ஆம் பிரிவைத் திருத்துதல்

(அ) அப்பிரிவின் (9) ஆம் பந்தியின் (ய) என்னும் உட்பந்தியை உடனடுத்துப் பின்வரும் உட்பந்தியை உட்புகுத்துவதன்மூலமும் :—

"(யய) கைத்தொழில் கழிவுகளை ஒழுங்குபடுத்தலும் கட்டுப்படுத்துதலும் ;" ;

2—எ 094628—2,845 (12/86)

(ஆ) அப்பிரிவின் (10) ஆம் பந்தியின் (ஈ) என்னும் உட்பந்தியில் "அத்தகைய நிலையங்களின் இருப்பாட்சி" என்னும் சொற்களுக்குப் பதிலாக "அத்தகைய நிலையங்களின் இருப்பாட்சி, பண்ணை விலங்குகளுக்கும் நாய்களுக்கும் பால் குத்துதலுக்கும் தடுப்பூசி குத்துதலுக்கும் வசதி செய்வதற்கான ஏற்பாடு," என்னும் சொற்களை இடுவதன்மூலமும்; அத்துடன்

(இ) அப்பிரிவின் (14அ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்தியை உட்புகுத்துவதன்மூலமும் :

"(14ஆ) கரையோர மீன்பிடித்தற்கான தடைகளை அகற்றுதல்;".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 159 ஆம் பிரிவைத் திருத்துதல்.

4. முதன்மைச் சட்டவாக்கத்தின் 159 ஆம் பிரிவு, அப்பிரிவின் (1) ஆம் உட்பிரிவில் அவ்வுட்பிரிவின் (ஈ) என்னும் பந்தியை உடனடுத்துப் பின்வரும் பந்திகளை உட்புகுத்துவதன்மூலமும் இத்தால் திருத்தப்படுகின்றது :—

"(ஈஈ) ஏழைமக்களின் நிவாரணத்திற்கும் ஆதாரவற்ற ஆட்களின் அல்லது உடல் ரீதியாக, உள ரீதியாக அல்லது சமூக ரீதியாக வலது குறைந்த ஆட்களின் புனர் வாழ்விற்கும் கவனிப்பிற்கும் சமூக அபிவிருத்திக் கருத்திட்டங்களுக்கு அல்லது வேலைவாய்ப்பு நிகழ்ச்சித் திட்டங்களுக்கும் சபையினால் வாக்களிக்கப்பட்ட எல்லா உதவுதொகைகளும் ;

(ஈஈஈ) சமயச் சடங்குகளையும் விழாக்களையும் ஒழுங்கமைத்தல், தர்ம பாடசாலைகளையும் சாசன ரக்சக மண்டலங்களையும் பேணல், கலாசார நிலையங்களைத் தாபித்தல், இலக்கிய கலாசார விழாக்களை ஒழுங்கமைத்தல், இலக்கிய கலாசாரப் பெறுமதி வாய்ந்த நூல்களை வெளியிடுதல், கலைஞர்களுக்கும் நூலாசிரியர்களுக்கும் கைப்பணியாளர்களுக்கும் பரிசுகள் வழங்கல் என்பவற்றுக்கேற்படும் செலவு தொகைகளுக்கான உதவுதொகைகள் உட்பட, சமயத்தினையும் கலாசாரத்தினையும் மேம்படுத்துவதற்கெனச் சபையால் வாக்களிக்கப்பட்ட எல்லா உதவுதொகைகளும்;".